செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண்: 477 நாள்: 9/8/17

நக.அ1/2520/2017.

வட்டாட்சியர் அலுவலகம், குடியாத்தம்.
நாள்: .08.2017.

## பத்திரிக்கைச் செய்தி

வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டத்திற்குட்பட்ட நாகல், காத்தாரிகுப்பம், பிச்சனூர், விழுதோணிப்பாளையம் ஆகிய 4 கிராமங்களில் காலியாக உள்ள கிராம உதவியாளர் பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| வ. எண் | கிராமத்தின் பெயர் | ஒதுக்கீடு இன சுழற்சி | பணியிடம் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | நெட்டேரி | 32-ஆதிதிராவிடர் (அருந்ததியர்) முன்னுரிமையற்றவர் | 1 |
| 2 | காத்தாரிகுப்பம் | 33-மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் முன்னுரிமையற்றவர் | 1 |
| 3 | பிச்சனூர் | 34-பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்ட முஸ்லிம் தவிர) (முன்னிரிமையற்றவர்) | 1 |
| 4 | விழுதோணிப்பாளையம் | 35-பொதுப்போட்டி (முன்னுரிமை) | 1 |

வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டத்திற்குட்பட்ட மேற்காணும் கிராமங்களில் காலியாக உள்ள கிராம உதவியாளர் பணியிடங்களை மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் மற்றும் நேரடி நியமன முறையில் இடஒதுக்கீடு அடிப்படையில் நிரப்பப்படவுள்ளன. கிராம உதவியாளர் பணிக்கு குடியாத்தம் வட்டத்தில் நிரந்தரமாக குடியிருக்கும் எஸ்.சி. மற்றும் எஸ்.டி. பிரிவுகளிலிருந்து 21 முதல் 35 வயது வரையிலும், எம்.பி.சி. மற்றும் பி.சி. பிரிவுகளிலிருந்து 21 முதல் 32 வயது வரையிலும், பொது வகுப்பினருக்கு 21 முதல் 30 வயது வரையிலும் 01.08.2017 நாளில் பூர்த்தி அடைந்திருக்க வேண்டும். குறைந்தபட்ச கல்வித்தகுதி 5-வது வகுப்பு தேர்ச்சிப் பெற்றவராகவும் அதிகபட்சம் 10ஆம் வகுப்பு தவறியவராகவும் இருக்கவேண்டும். அரசு அங்கீகாரம் பெற்ற கல்வி நிலைய சான்று பெற்றவராக இருக்க வேண்டும். (தாய்மொழி) தமிழ் இனத்தவராக, எழுத படிக்கத் தெளிவாக தெரிந்திருக்க வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் அந்த கிராமத்திற்கான இனசுழற்சி ஒதுக்கீடு செய்யப்பட்ட வகுப்பினர்கள் மட்டுமே விண்ணப்பிக்கப்படவேண்டும். அந்தந்த கிராமங்கள்/சுற்றியுள்ள கிராமங்களை சேர்ந்தவராக இருக்க வேண்டும்.

கிராம உதவியாளர் பணிக்கு விரும்பம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கும் போது 1.பெயர், 2.தகப்பனர் பெயர், 3.பாலினம், 4.பிறந்த தேதி, 5.அஞ்சல் முகவரி (அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்), 6.கல்விதகுதி, 7.சாதி, 8.முன்னுரிமை விவரம் (ஏதேனும் இருப்பின் குறிப்பிடவும் விதவை/ முன்னாள் இராணுவத்தினர் / மாற்று திறனாளிகள் / கலப்பு திருமணம் ) 9. வேலை வாய்ப்பு பதிவு விவரம் (இருப்பின்). 10. குடும்ப அட்டை எண் (குடும்ப அட்டை நகல்) வரிசை எண்.4 முதல் 10 வரை உள்ள ஆவணங்களுக்கு சான்று / நகல்களுடன் விண்ணப்பிக்கலாம். மேலும் தகுதிவாய்ந்த நபர்களிடமிருந்து 23.08.2017 மாலை 05.45 மணிக்குள் குடியாத்தம் வட்டாட்சியர் அலுவலகத்தில் கிடைக்கும்படி நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ உரிய ஆவணங்களுடன் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

வட்டாட்சியர்
குடியாத்தம்.

9/8/17

பெறுநர்
நிருபர்

9.8.17

9/8/17

செ.ம.தொ.அ.
வேலூர்- 9.